RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2442

# Pari's Hospitality in Velpari Novel

**S. Mahalashmi [a, *]**

[a] Department of Tamil, Kongunadu Arts And Science College, Coimbatore-29, India

*Corresponding author Email: mahamaha02061982@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2441

Received: 13-06-2024; Revised: 30-10-2024; Accepted: 06-11-2024; Published: 17-11-2024

**Abstract:** One of the Kadai Ezhu philanthropists is credited with giving his chariot to Pari Mullai Kodi and is hailed as superior to the Moovendhars in philanthropy. Similarly, poet Kapilar is respected by the Moovendhars among the poets of the Sangam age. A contemporary of Barry. Knowing the great fame of Pari, Kapilar is curious to know why Pari got such a specialty, Pari and Kapilar meet. Hospitality is one of the most important characteristics of the Tamil family. The purpose of this article is to study through the novel Velpari how Kapilar was hospitable to Kapilar who came to see Pari.

**Keywords:** Moovendhars, Pari, Kapilar, Mullai Kodi, Hospitality

# வேள்பாரி புதினம் காட்டும் பாரியின் விருந்தோம்பல்

**சு. மகாலட்சுமி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்-29, இந்தியா

## முன்னுரை

கடையேழு வள்ளல்களில் ஒருவர் பாரி முல்லைக் கொடிக்குத் தான் ஊர்ந்து வந்த தேரை தந்த சிறப்பு பெற்றவர் வள்ளல் தன்மையில் மூவேந்தர்களைக் காட்டிலும் உயர்ந்தவர் என்று போற்றப்படுபவர். அதுபோன்று சங்ககாலப் புலவர்களில் மூவேந்தர்களாலும் மதிக்கப்படும் பெருமை கொண்டவர் புலவர் கபிலர். பாரியின் சமகாலத்தவர். பாரியின் பெரும்புகழை அறிந்த கபிலருக்கு, 'எதன் பொருட்டு பாரிக்கு இத்தகு சிறப்பு கிட்டியது?" என்பதை அறியும் ஆவல் எழவே, பாரி - கபிலர் சந்திப்பு நிகழ்கிறது.

தமிழ்க்குடியின் தலையாய பண்புகளில் ஒன்று விருந்தோம்பல். நம்மை நாடி வரும் விருந்தினர்களை ஏழடி முன் சென்று முகமலர்ச்சியுடன் வரவேற்று உணவளித்து பாதுகாப்பதே "நல்விருந்து எனப்படும்" அவ்வகையில் பாரியை காண வந்த கபிலருக்கு எவ்விதம் விருந்தோம்பினான் என்பதை வேள்பாரி நாவலின் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## விருந்து - விருந்தோம்பல்

“விருந்து” என்ற சொல் தொல்காப்பியர் பார்வையில் ‘புதியது’ என்ற பொருளிலேயெ பயன்படுத்தப்பட்டுள்ளதை

“விருந்தேதானும் புதுவது புனைந்த

யாப்பின்மேற்றெ”

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன (Thirugnanasambantham, 2020). “புதிதாய் வந்தோர்க்கு உணவு கொடுத்தல்”என தமிழ் மொழி அகராதியும் குறிப்பிடுகின்றன (Kathiravetpillai, 2016). ஆகவே விருந்து

என்னும் சொல் புதுமையை குறிக்கும் என்றும் இச்சொல் பின்னாளில் ஆகுபெயராகி விருந்தினரைக் குறித்து வழங்கலாயிற்று என்றும் கூறலாம். முன் பின் அறியாத புதிய மனிதர்களை வரவேற்று உபசரிப்பதே விருந்தோம்பல் எனலாம்.

## வேள்பாரி புதினத்தில் கபிலர்

கபிலர் பறம்பு நாட்டுக்குச் சென்றதும் இல்லை. பாரியைக் கண்டதும் இல்லை. பாணர்கள் பாரியைப் பற்றிப் பாடிய பொழுது பாரியைக் குறித்த வியப்பை விட ஐயமே கபிலருக்கு மேலோங்கி இருந்தது. எனவே புகழால் நிலை பெற்றுள்ள பாரியின் மீது கசப்பு உருவாகி இருந்தது.

நடுநாடு அரசன் வேண்மானைக் காண சென்று கொண்டிருந்த கபிலர் களைப்பினால் சிற்றரசன் செம்பனின் அரண்மனைக்கு சென்றார். கபிலரின் வரவு செம்பனுக்கு மகிழ்வை அளித்தது. இரவு விருந்தில் வீரன் உண்பதற்கு கறித்துண்டங்களை குழிசிப்பானை நிறையக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனான். பானையை கபிலர் உண்ண ஏதுவாக ஒரு கையில் நகர்த்த முயன்றவன் முடியாமல் மதுக்குப்பியை கீழே வைத்துவிட்டு இருகைகளாலும் தள்ளினான் செம்பன். கபிலர்,

"பகல் எல்லாம் பாணர்களுக்கு அள்ளி வழங்கியதால், உனது கரம் சோர்ந்து போய்விட்டதா?"

“இல்லை பெரும்புலவரே… அவர்களுக்கு அள்ளி வழங்கும் நல் வாய்ப்பு எதுவும் இன்று எனக்குக் கிடைக்கவில்லை”

“ஏன்?”

“அவர்கள் பாரியை பார்த்துவிட்டு வருபவர்கள் எடுத்துச் செல்ல முடியாத அளவு பொருட்களோடு தான் இங்கு வந்தார்கள். எனக்கு நன்கு அறிந்த கீழ்க்குடிப் பாணர் கூட்டம் அது. எனவே என்னோடு விருந்துண்டு ஆடிக்களித்து விட்டுப் போனார்கள்” (Venkatesan, 2020)

பாணர்கள் எவ்வாறு வந்தார்கள் என விசாரித்த கபிலரிடம், 'எனது எல்லையில் பறம்பு மலைக்கு செல்லும் பாதை ஒன்று உண்டு. ஆனால் அது முறையான பாதை அல்ல" என செம்பன் கூற, முறையான பாதையை முறையற்று வைத்திருப்பது அரச குற்றம். பாதை சரியில்லாத நிலையில் பயணம் மட்டும் எவ்வாறு சரியாக அமையும் என்று வினா எழுப்புகிறார் கபிலர்.

“பாரி, விருந்தினரை நிர்வகிப்பதில் தேர்ந்தவன் என்று நினைக்கிறேன். ஆனால் வள்ளல் தன்மை என்பது நிர்வாகத் திறமை அல்ல. அது குழந்தையின் குரல் கேட்ட கணத்தில் பால் கசியும் தாயின் மார்பைப் போன்றது”

“நீங்கள் பாரியை வள்ளல் இல்லை என்கிறீர்களா? “பாரியை வள்ளல் என்றோ சிறந்த அரசன் என்றோ என்னால் இப்போது செல்லிவிட முடியாது”

“நாளை காலை நான் வேட்டுவன் பாறை வழியாகப் பறம்பு நாட்டுக்குள் நுழைவேன்” (Venkatesan, 2020)

கறித்துண்டப்பானையின் நகர்வு, காலத்தால் அழியாத பாரி-கபிலர் சந்திப்பிற்கு தூண்டுதலாக அமைந்தது. பாரியை எவ்வாறேனும் சந்தித்தே ஆக வேண்டும் என்ற ஆவலினால் தனியே பறம்பு மலைக்கு செல்ல வேட்டுவன் பாறையில் அடி எடுத்து வைத்த கபிலருக்கு உடல் ரீதியாக பல பாதிப்புகள் ஏற்பட்டது. சமதளத்தில் நடைபயின்ற அவரால் மலைபகுதிகளில் ஏறுவது கடினமாக இருந்தது. பாரியின் வீரர்களுள் ஒருவனான நீலன் தற்செயலாக சந்தித்து வழிப் பயணத்தில் துணையாக நின்றான். பாதிப்பயணம் நிறைவடைந்த நிலையில் கபிலர் தன்னைக்காண வந்திருப்பதை அறிந்த பாரி மிக்க மகிழ்வுடன் எதிர்சென்று வரவேற்று அழைத்து வர புறப்பட்டான். புலிவால் குகையில் தங்கியிருந்த கபிலரிடம்,

“முதல் நாளே கால்தசை பிறண்டுவிட்டது. நாக்கறுத்தான் புற்கள் உடல் எங்கும் கீறியுள்ளன. காக்காவிரிச்சி நிலைகுலைய வைத்துள்ளது. நீலன் எதிர்பாராமல் தூக்கி

அடித்திருக்கிறான். இவ்வளவு தாக்குதல்களையும் வலியையும் தாங்கிய படி விடாமல் மலைகள் கடந்து வந்திருக்கறீர்கள் இனியாவது.... எனது தோளிலே தூக்கிச் செல்ல அனுமதிப்பீர்களா?"

திகைப்பில் இருந்து மீளாத கபிலர் நெருங்கி வரும் மா மனிதனைப் பார்த்துக் கேட்டார்."நீங்கள் யார்?"

"வேள்பாரி" (Venkatesan, 2020)

பலதடைகளைக் கடந்து தன்னைக்காண வந்திருக்கும் கபிலரை இனியும் துன்பப்படவிடக்கூடாது என்று தன் தோளிலே பறம்பு வரை கொண்டு சென்ற பாரியின் பண்பு போற்றுதலுக்கு உரியது.

## விருந்து படைத்தல்

கபிலரின் வரவு பாரியை மட்டுமல்ல அவன் மக்களையும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது. தன் தலைவனே தோளின் மீது சுமந்து வந்தான் என்பதை அறிந்ததும் மகிழ்ச்சி இரட்டிப்பாகியது.

"கபிலரின் வருகை காட்டின் திருவிழா" என்று பாரி சொன்னதில் இருந்து அது தொடங்கியது. காட்டின் விழா என்றால், அதன் முதல் வெளிப்பாடு வேட்டை தான். வேட்டையில் சிக்கும் சிறந்த விலங்கு எதுவோ அதுவே விருந்தைத் தீர்மானிக்கும்.

ஒவ்வொரு விலங்கின் சுவைக்கும் ஏற்க மதுவகை உண்டு மதுவின் தன்மைக்கு ஏற்றபடியே இசை முழங்கும். இசைக்கு ஏற்பவே ஆட்டம். அன்றைய ஆட்டத்தின் ஆரம்பம் வேட்டையாடப்படும் விலங்கில் இருந்தே தொடங்குகிறது. அது மானாட்டமா மயிலாட்டமான என்பது மதுவோடும் உணவோடும் இசையோடும் ஆட்டத்தோடும் கலந்தது. மான்கறிக்கு ஈச்சங்கள் எடுபடாது. பறவைக் கறிக்கு தென்னங் கள் பொருந்தாது. ஈனா கெடாரிக்கு மூன்றாம் நாள் பனங் கள் தான் சிறந்தது. அத்திமதுவுக்கு அறுபதாங்கோழயின் கறிக்கும் ஈடு இவ்வுலகில் கிடையாது அதை விருந்தாக கபிலருக்கு அளிக்க முடிவு செய்திருந்தான்.அவ்வளவு எளிதில் அகப்படாதது "அறுபதாங்கோழி அக்கோழி அகப்படாதா?" (Venkatesan, 2020)

என ஏக்கத்தோடு இருந்த பாரிக்கு அக்கோழியும் கிடைத்தது.கபிலருக்கு அரண்மனையில் நடக்கும் முதல் விருந்து. கபிலரை அழைத்து வந்ததில் முக்கியப் பங்காற்றியவர்கள் வேட்டூர்பழையனும் நீலனும்.

"வேட்டூர்ப் பழையனுக்கும் நீலனுக்கும் அருபதாங்கோழியின் கறித்துண்டு ஆளுக்கொன்று கிடைத்தது. பாரிக்குத் தான் அதுவுமில்லை" (Venkatesan, 2020)

"ஒருநாட்செல்லலாம் இருநாட்செல்லலாம்

பலநாள் பயின்று பலரோடு செலினும்

தலைநாள் போன்ற விரும்பினாள் மாதே" (Selvarasu, 2020)

என்ற வரிகளுக்கு இணங்க கபிலருக்கு முதலில் விருந்து படைத்து மற்றவையை பழையனுக்கும், நீலனுக்கும் பகிர்ந்து அளித்து தான் உண்ணாமல் விருந்தினர்களை உண்ண வைத்து மகிழ்ந்த பாரியின் விருந்தோம்பல் பாங்கு இங்கு நோக்கத்தக்கது.

கபிலர் திகைப்பில் இருந்து மீள முடியாமல் இருந்தார். ஒவ்வொரு நாளும் பெரும் விருந்தோடு தொடங்குகிறது. மறுநாள் அதை விட பெரிய விருந்து அரங்கேறுகிறது. மிகப்பெரிய பேரரசர்களோடு விருந்துண்ட கபிலருக்கு பாரியின் விருந்தோம்பல் புதியதாக இருந்தது. ஏனெனில் பேரரசர்களின் விருந்தோ அதிகாரம் மற்றும் ஆடம்பரத்தோடு நடந்ததாகத் தோன்றியது. ஆனால் பாரியின் விருந்தோம்பல் பேரன்பின் வடிவமாகவே தோன்றியது. கபிலருக்கு முன்பு அவர் செம்பனிடம் சொன்ன வார்த்தைகள் உள்ளத்தை மிகவும் அறுத்துக் கொண்டிருந்தன.

"பாரியின் தூய்மையான அன்புக்கு முன் நான் கூனிக் குறுகியே நிற்கிறேன். நான் அதற்குத் தகுதியானவன் அல்ல. அவனது புகழ் மீது ஐயங் கொண்டு அதைக் கண்டறியவே நான் இங்கு வந்தேன். இதை அவனிடம் சொல்ல வேண்டும்" (Venkatesan, 2020)

என்று கபிலரின் மனம் தவித்தது. கபிலரை விட்டுப்பிரியும் எண்ணம் பாரிக்கு இல்லை. எனவே தனது மலையிலேயே கபிலருக்கு குடில் அமைத்து தனது மக்களுக்கு எழுதக் கற்றுக் கொடுக்க வேண்டியிருந்தான். அவ்வாறே எட்டு பேருக்கு எழுதக் கற்றுக் கொடுக்கவும் தொடங்கி இருந்தார்.

கபிலரை பத்திரமாக பாதுகாக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான் பாரி. தரையில் இருந்து வந்தவர்களால் காட்டின் குளிரையும், பூச்சிகளின் கடியையும் தாங்கிக் கொள்ள முடியாது. எனவே அதில் இருந்து காக்க எலிமயிர்ப் போர்வையும், மருந்துப் பட்டைகளையும் கொண்டு வருமாறு கூறியிருந்தான்.

"தந்தரையிலிருந்து வந்தவர்களால் இந்தக் குளிரைத் தாங்க முடியாது. கடுங்குளிர் தாங்க கபிலருக்கு எலிமயிர்ப் போர்வையை நெய்யுமாறு பாரி சொன்னான் (Venkatesan, 2020).

"பறம்பில் நீங்கள் இருக்கும் ஒவ்வொரு பொழுதும் என் மனம் பதற்றத்தில் தான் இருந்தது. அதுவும் கார்காலம் தொடங்கிய பிறகு என் பதற்றம் அளவற்றதாகிவிட்டது. எண்ணற்ற பூச்சிகள், உயிரினங்கள் வாழும் இந்தக் காட்டில் கண்ணுக்குத் தெரியாத சிறு பூச்சிகூட பெரும் நஞ்சை உட்செலுத்திவிடும். அதன் பிறகு நஞ்சுமுறி கொடுக்கும் வரை உங்களின் உடல் அதைத் தாங்குமா என்பது தெரியாது. எனவே என் பதற்றம் அதிகமாகிக் கொண்டே தான் இருந்தது வண்டுகடி மரப்பட்டையை அரைத்து உடலெங்கும் தேய்த்து விட்டால் பிறகு எந்த ஒரு பூச்சியும் உங்களை அண்டாது. நான் பறம்புக்கு வந்து இத்தனை நாட்களாகி விட்டன. இன்னும் என்னை ஆயத்தப்படுத்தும் வேலை முடியவில்லை போலும். சிரித்துக் கொண்டே பாரி சொன்னான்"வந்து செல்பவர்களுக்கு இவ்வளவு தேவையில்லை வந்தவர்களுக்கு மட்டும் தான் இவ்வளவும் தேவை"மறுமொழிக்குள் இருக்கும் சூட்சுமம் கபிலருக்குப் புரிந்தது,"பாரியின் ஒவ்வொரு சொல்லும் செயலும் கபிலர் மீதான பேரன்பைக் கொட்டித் தீர்த்தன" (Venkatesan, 2020)

என கபிலர் பறம்பு மலைக்கு வந்து பல நாட்கள் ஆனாலும் முதல் நாள் போன்றே விருப்பத்தோடு இருந்தான் பாரி. தன்னைவிட்டு ஒருபோதும் கபிலர் பிரியப்போவதில்லை என்பதனை உறுதியாக நம்பினான்.

"பறம்பு நாடே ஒரு தாய்போல் இருக்கிறது ஒரு தாயின் குணத்தோடு விளங்கும் நாட்டை ஏன் தாய்நாடு எனச் சொல்லக்கூடாது" (Venkatesan, 2020)

என விருந்தினராக வந்த கபிலர் மனதார நினைக்குமாறு பாரியின் விருந்தோம்பல் பண்பு இருந்தது என்பது போற்றுதலுக்கு உரியது.

விருந்தளித்தல் உபசரித்தல் ஆகிய பண்பாடு தமிழ் மக்களின் வாழ்வில் இரண்டறக்கலந்த ஒன்று தமிழர்களை அடையாளப் படுத்துவதே இப்பண்புகள் தான் பெயரளவில் மட்டுமே அறிந்து வைத்திருந்தவர்களின் சந்திப்பு மனப்பிம்பங்களை தகர்த்தெறிந்து பேரன்பின் வெளிப்பாடாகவே விருந்தோம்பல் இருக்க வேண்டும் என்ற கூற்றினை மெய்ப்பிப்பதாக அமைந்து காலத்தால் அழிக்க முடியாத அடையாளமாக உருவாகியது எனில் அது மிகையாது.

## முடிவுரை

காலமாற்றம் காரணமாக இப்பண்பு தமிழர்களிடையே அருகிவருவதைக் காணமுடிகிறது. புதியவர்களை விருந்தினர் என அழைக்கும் மரபு மாறி தன் உற்றார் உறவினர்களை விருந்தினர்களாக அழைக்கும் மரபு தோன்றிவிட்டது. முன்பின் அறிமுகமில்லாதவர்களை வரவேற்று உணவு அளிக்க அச்சம் ஏற்பட்டுள்ளது. அவர்களால் தங்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்ற தயக்கம் இருந்து வருவதால் விருந்தோம்பல் பண்பு படிப்படியாக குறைந்து வருகிறது. தற்பொழுது விருந்தோம்பல் என்பது செல்வச் செழிப்பைக் காட்டுவதற்காகவும், பயனை எதிர்பார்த்துச் செய்வதற்காகவும் மேற்கொள்ளப்படுகிறது.

## References

Kathiravetpillai, N. (2016) Tamilmoli Agarathi, Saradha Pathipagam, Chennai, India

Selvarasu, S. (2024) Purananuru Urai Verpadu, New Century Book House, Chennai, India

Thirugnanasambantham, (2020) Tholkapiyam, Porulathirakram Moolamum uraiyum, Kathir Pathipagam, Thiruvaiyaru, India

Venkatesan, S. (2020) Verayuga Nayagan Velpari, Vikatan Presuram, Chennai, India

### Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

K. Mahalashmi, Pari's Hospitality in Velpari Novel, Indian Journal of Tamil, 5(4), (2024) 8-12. https://doi.org/10.54392/ijot2442